Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# The Novel *Marupakkam* (The Other Side) and the Worship of God

**N. S. Abitha,** PhD Research Scholar In Tamil, Tamil Research Centre,
ST.Hindu College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-3961-0845**
**DOI: 10.5281/zenodo.6619160**

## Abstract

*The Tamil dictionary says that the word 'worship' has many meanings in Tamil like Appiyasa, Arathana, Thalmai, Vanakkam, Valipadal. In the worship of the deity, people believe that if good happens, it is the grace of God and if evil happens, it is the anger of the deity. On the other hand, based on these spiritual matters, it is stated in the novel. The purpose of this article is to speak of minor forms of worship such as the mother goddess, Vinayaka, the virgin deity and the male deity.*

**Keywords:** Gods of Worship, God, Worship, Purpose.

.

## References

[1] Gandhi.K. *Tamil Customs and Beliefs*. World Tamil Research Institute, Chennai, 2002.
[2] Somale. *Tradition and Culture of the People*. Tamil Nadu. National Book Trust, India, 1975.
[3] Paramasivanandam. A. M. *Society Culture.* Tamilkalai Publishing House, Chennai, 1962.
[4] Paramasivanandam. A.M. *Tamil Nadu Festivals*. Tamilkalai Publishing House, Chennai, 1962.
[5] Thavatthiru Kunrakkudi Beats. *Churches are Community Centers.* Kalaivani Puthagalayam, Chennai - 1987.

## Witness

1. K. Marimuthu – Age 84
2. S. Govindan – Age 76
3. M. Gundumani (Priest - Poosari) – Age 62
4. M. Santhakumar (Soothsayer - Samiyadi) – Age 65

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# *மறுபக்கம்* நாவலும் தெய்வ வழிபாடும்

**ந. சொ. அபிதா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்க்கலை ஆய்வகம்,

தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0003-3961-0845**

**DOI: 10.5281/zenodo.6619160**

**ஆய்வுச்சுருக்கம்**

*வழிபாடு என்ற சொல்லுக்கு அப்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம் வழிபடல்" என்று பொருள் உள்ளதாக தமிழ் மொழி அகராதி கூறுகிறது. "கோயிலிலா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழி தமிழில் வழங்கப்படுகிறது. தமிழர்கள் நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர். மக்கள் நாட்டுப்புற தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர். இவற்றின் அடிப்படையில் மறுபக்கம் நாவலில் கூறப்பட்டுள்ள தெய்வ வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** தெய்வவழிபாடு, இறைவன், செயல்பாடு, பயனபாடு.

**முன்னுரை**

வழிபாடு என்ற சொல் 'வழிபடு' என்ற சொல்லில் இருந்து வந்தது. "வழிபாடு என்ற சொல்லுக்கு அப்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம் வழிபடல்" என்று பொருள் உள்ளதாக தமிழ் மொழி அகராதி கூறுகிறது. "கோயிலிலா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழி தமிழில் வழங்கப்படுகிறது. தமிழர்கள் நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர். மக்கள் நாட்டுப்புற தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர். இவற்றின் அடிப்படையில் மறுபக்கம் நாவலில் கூறப்பட்டுள்ள தெய்வ வழிபாட்டு முறைகளை குறித்து இங்கு காண்போம்.

**பெருந்தெய்வ வழிபாடு**

சிவன், திருமால், முருகன், பிள்ளையார் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற பெருந்தெய்வங்களாக விளங்குகின்றனர். பெருந்தெய்வங்கள் வேதக் கடவுளாகவோ அதனோடு தொடர்பு கடவுளாகவோ கருதப்படுகின்றனர். இத்தெய்வங்களுக்கு ஆகம விதிப்படி கோயிலும் திட்டவட்டமான பூஜை, திருவிழாக்களும் உண்டு, வழிபாட்டு முறையில் பிராமணிய முறை பின்பற்றப்படுவதோடு திருவிழாக்களும் குறித்த காலத்தில் நடைபெறுகின்றன. மறுபக்கம் நாவலில் பெருந்தெய்வங்களுள் ஒருவரான விநாயகர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளார். 'விநாயகர்' பிள்ளையார் என்ற பெயரில் நாவலில் இடம்பெறுகின்றார். பிள்ளையாரை அம்மன் கோயிலில் வைப்பது குறித்து விவாதிக்கப்படுகிறது. ஊர் மக்கள் பிள்ளையார் சிலையை அம்மன் கோயிலுக்குள் வைக்க கூடாது என்று கூறுகின்றனர். 'பிள்ளையார் தான் நம்முடைய பண்பாட்டு அடையாளம் என்கிறார் சதாசிவம்'. பிள்ளையார் தெய்வம் உள்ளே வந்தால் அதனோடு குடமுழுக்கு வரும். பின்னர் ஒரு அய்யர் உள்ளே நுழைவார். அதனோடு வடமொழியும் உள்ளே நுழையும். காலங் காலமாக நம்மை காத்து வருகின்ற முத்தாரம்மனும் மற்ற

தெய்வங்களும் கூண்டோடே அடிமைப்பட்டு போய்விடுவார்கள் என்ற கருத்தை ஆசிரியர் பதிவு செய்கிறார். "பிள்ளையார் கோயிலக் கட்டுறியளோ பிரம்மா கோயிலக் கட்டுறியளோ வேற எங்கையாவது இடம் வாங்கி கட்டுங்க அம்மங் கோயிலில் வளாகத்துக்குள்ள வேண்டாம்" என்கிறார் செல்வராசு என்கிற கதாபாத்திரம் இவ்வாறு பெருந்தெய்வமான விநாயகர் சிறு தெய்வமான அம்மன் கோயிலுக்குள் நுழைவதை மக்கள் விரும்பவில்லை என்பதை நாவலில் கூறப்பட்டுள்ளது.

**சிறுதெய்வ வழிபாடு**

சிறுதெய்வங்கள் வேதகடவுளோடு பெரும்பாலும் தொடர்பு கொள்ளாதவை முழுமுதற்கடவுளாகக் கருதி வணங்கப்படாதவை பூஜை, திருவிழா முதலியவற்றில் திட்டவட்டமான வரையறை கிடையாது. பிராமணர் அல்லாதோர் பூசாரியாக இருப்பர். அய்யனார் போன்றவை பெருதெய்வ வழிபாட்டு முறையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வங்களை இடைநிலைப் பட்ட தெய்வங்கள் என்று கூறுவர். சிறு தெய்வ வகைப்பாடாக தாய் தெய்வம், ஆண் தெய்வம், கன்னி தெய்வம், குலதெய்வம் போன்றவை மறுபக்கம் நாவலில் கூறப்பட்டுள்ளன. இத்தெய்வ வழிபாட்டு முறை பெருப்பாலான மக்களால் பின்பற்றப்பட்டிருந்ததை அறிய முடிகிறது.

**தாய்த் தெய்வ வழிபாடு**

'அம்மன்' என்ற பொதுப்பெயரால் அழைக்கப்படும் பெண் தெய்வங்கள் பெண்மை மற்றும் தாய்மை குணங்களை அடைய பெற்றவையாக விளங்குகின்றன. தொடக்கக் காலத்தில் வளமை தொடர்பான சடங்குகள் பெண்களை கொண்டே மேற்கொள்ளப்பட்டதால் பின்னாளில் பெண்களே வளமையின் குறியீடாக கருதி வழிப்படப்பட்டனர். இதுவே தாய்தெய்வ வழிபாடு தோன்றி வளர்வதற்க்கு காரணமாக அமைந்தது. மறுபக்கம் நாவலில் கதைக்களமான குமரி மாவட்ட நாடார் இன மக்கள் தாய்தெய்வங்களாக மண்டைக்காட்டம்மை, அழகிய நாயகி அம்மன், ஆகிய தெய்வங்களை வழிபட்டிருக்கின்றனர்.

**மண்டைக்காட்டம்மன் வழிபாடு**

மண்டைக்காடு ஒரு காலத்தில் தருவம் புல் நிறைந்த பகுதியாக இருந்தது. அங்கு சிறுவர்கள் மணலில் புற்று போன்று செய்து 'சாமி வைத்து' விளையாடியதாகவும் மாலையில் அதை கலைத்துவிட்டு செல்வதாகவும் ஒருநாள் அந்த மணல் புற்றை காலால் கலைத்தப் போது இரத்தம் வந்ததாகவும் அதனால் பயந்து போன சிறுவர்கள் ஊர் பெரியவர்களிடம் கூற அவர்கள் அந்த புற்றுக்கு பூசை செய்தார்கள் என்றும் கூறப்படுகிறது. இன்றும் அந்தப் புற்றுக்கு வழிபாடு நடைபெறுகிறது. மண்டைக் காட்டம்மையைப் பற்றி ஒரு கதை உண்டு. மண்டைக்காட்டம்மை ஒரு நம்பூதிரி குடும்பத்தில் பிறந்தவள். மண்டைக்காட்டம்மையின் தகப்பனார் ஒரு பெரிய நம்பூதிரி. இவர்களின் வீட்டில் பறையர் இனத்தைச் சார்ந்த ஒருவன் வேலைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மாடு மேய்ப்பான், வீட்டு வேலைகளை செய்வான். நம்பூதிரி வீட்டில் அவனுக்கு கஞ்சி கொடுப்பார்கள். வருடத்திற்கு ஒருமுறை வேட்டி முண்டு கிடைக்கும். அவனுக்கு மாடு மேய்க்கிற வேலை பிடிக்கவில்லை வேதம் படிக்க ஆசைப்பட்டான். ஆனால் நம்பூதிரி வீட்டில் அவனை சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். அவன் வேறொரு ஊர் நம்பூதிரியிடம் மண்டைக்காட்டு நம்பூதிரி மகன் என்று பொய் சொல்லி வேதம் படிக்க சென்றான். அதனை நம்பி அந்த நம்பூதிரி அவனுக்கு தனக்கு தெரிந்த எல்லா வித்தைகளையும் கற்றுக் கொடுத்தான். சில காலம் கழித்து அவன் மண்டைக்காட்டுக்கே திரும்பி வந்து ஒரு குடிசையில் தங்கியிருந்தான். அவன் போகிறவரிடம் அவன் கற்ற வித்தையைக் காட்டி காசு வரச் செய்தான். நோயை குணமாக்கினான்.

இதை அறிந்த மண்டைக்காட்டு நம்பூதிரி அவரின் மகள் மண்டைக்காட்டம்மையை அவனுக்கு திருமணம் செய்து வைத்தார்.

மண்டைக்காட்டம்மைக்கு ஒரு வெங்கலக் கோட்டைக் கட்டி நடுவில் கொட்டாரம் அமைத்துக் கொடுத்தார். நம்பூதிரி மகளுக்கு முதலில் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு நான்கு வயதான போது படிக்க குருவிடம் அனுப்பினார்கள். எல்லா பிள்ளைகளும் நன்றாக படிக்க இந்த குழந்தைகள் குளத்தில் மீன் பிடித்து சாப்பிட்டது. இதை அறிந்த நம்பூதிரிக்கு பழைய விவரம் எல்லாம் தெரிய ஆரம்பித்தது. அவர் மகளிடம் நாம் மோசம் போய்விட்டோம் என்று கூறி வருந்தினார். மண்டைக்காட்டம்மை அன்று கோட்டையில் வருந்து ஏற்பாடு செய்து அங்கு வேலைச் செய்யும் தோழியர்களுக்குத் துணியும், நகையும் கொடுத்து மறுநாள் வரச் சொன்னார். அன்று கோட்டையில் எல்லோரையும் தூங்க வைத்து விட்டு சங்கிலியால் கதவை மூடி நான் பத்தினி என்றால் இங்கு அக்கினி மழை பொழிய வேண்டும் என்று கூறினார். உடனே அக்கினி மழைப் பொழிந்து எல்லோரையும் எரித்தது. மண்டைக்காட்டம்மையை தெய்வமாக அந்த ஊர் மக்கள் வணங்குகின்றனர். இந்த அம்மன் சிறு தெய்வ வழிபாட்டில் இருந்து இன்று கொடைவிழா, ஊர்வலம் என உயர் நிலையாக்கம் பெற்று வருகிறது. மண்டைக்காட்டம்மன் கோயிலில் ஐந்து வகையான வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுகின்றன. பெருந்தெய்வ கோயில்களில் செய்யப்படும் அர்ச்சனைச் செய்யப்படுகின்றன. மண்டையப்பம் செய்துபடைத்தல் மண்டைக்காட்டம்மைக்கான சிறப்பு வழிபாடாக அமைகிறது. பொங்காலை, வெடிவழிபாடு, உப்பு மற்றும் நல்லமிளகு, ஆள் உருவம் போன்றவை அம்மனுக்குக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

**அழகிய நாயகி அம்மன்**

அழகிய நாயகி அம்மன் புட்டாபுரம் என்னும் இடத்தில் மீனவர்கள் மீன்பிடிக்க வலையை வீசிய போது மீனுக்கு பதிலாக இந்த அம்மன் சிலை கிடைக்க அந்த சிலையை வணங்கி வந்த மீனவர் குடும்பத்தில் ஏதேனும் நல்ல நிகழ்வு நடந்ததால் முதலில் அம்மனுக்கு பூசை வைப்பதை வழக்கமாக கொண்டிருந்தனர். இதனை "இது எங்க அம்ம நாங்க வச்சிக் கும்பிட்ட தெய்வம். எங்க வீடுகள்ல நல்ல காரியம் எது முடிவானாலும் முதல்ல இந்த அம்மனுக்கு பூசை நடத்திட்டு அப்புறம் தான் சர்சில் சாமியார் கிட்ட சொல்லுவோம்" என அலெக்சாண்டர் சேதுவிடம் கூறும் நாவல் பகுதி உணர்த்துகிறது.

**கன்னிதெய்வ வழிபாடு**

கன்னி தெய்வ வழிபாடு சிறு தெய்வ வழிபாடே ஆகும். கன்னி என்ற சொல்லிற்;குப் பூப்படைந்து திருமணமாகாத கன்னித்தன்மை இழக்காத பெண் என்று அகராதி பொருள் கூறுகிறது. இயல்பாகவோ அல்லது கொலைச்செய்யப்பட்டோ இறக்கும் பெண்களை கன்னித்தெய்வமாக வழிபடும் மரபு தமிழகத்தில் பரவலாக காணப்படுகிறது. இறந்த கன்னிப்பெண் தன் வீட்டாருக்கு வளமையும், பாதுகாப்பும் அளிப்பதாகவும் அவள் கன்னிப்பெண்கள் மீது இறங்கி அருள்வாக்கு சொல்வதாகவும் நம்பப்படுகிறது. குடும்பத்தில் திருமணம் ஆகாமல் இறந்து போன பெண்களுக்கு கன்னிக்கு வைக்கும் பழக்கம் உள்ளதை நாவலில் சேது மாதவனுக்கு வெங்கடேசனின் மனைவி சிவகாமி கூறுவதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் கன்னி மூலையில் ஆண்டுதோறும் கன்னித்தெய்வத்திற்கு துணி, வளையல், பவுடர், சோப்பு ஆகியவை வைத்து பூசை செய்யப்படும். குடும்பங்களில் திருமணம் ஆகாமல் இறந்து போகும் கன்னிகளை தெய்வமாக வழிபடும் வழக்கம் எல்லா வீடுகிளிலும் காணப்படுகிறது. "இவிய தங்கச்சிமார் ரெண்டுபேர் இளம்வயதில் தவறிபோனாக அவியளுக்குத் துணி வளையல், பூ,

பொட்டு எல்லாம் வாங்கி வச்சிக் குரு கும்பிடுகிற நாள் இன்னு" என்று நாவலில் கன்னி தெய்வம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

**ஆண் தெய்வ வழிபாடு**

ஆண் தெய்வங்களில் சில முதன்மை தெய்வங்களாகவும் பல முதன்மைத் தெய்வங்களுக்குத் துணைமைத் தெய்வங்களாகவும் விளங்குகின்றன. துணைமைத் தெய்வங்களை பரிவாரத் தெய்வங்கள் என்றும் கூறுவதுண்டு. மறுபக்கம் நாவலில் ஆண் தெய்வங்களில் சேர்வைக்காரன்சாமி, சிதம்பரநாடன் போன்றவர்கள் முதன்மை தெய்வமாகவும், சுடலை மாடன் சாமி துணைமை தெய்வமாகவும் கூறப்பட்டுள்ளன.

**சேர்வைக்காரன் சாமி**

நாவலில் கூறப்பட்டுள்ள ஆண் தெய்வங்களில் முதன்மை தெய்வமாக கருதப்படும் சேர்வைக்காரன் சாமி சிறுதெய்வமாகும். மறுபக்கம் நாவலில் முத்தைய்யா என்பவர் சேர்வைக்காரன் சாமிக்கு வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடத்தப்படுவதாகவும் திருவிழாவின் போது சாமிக்கு கருங்கிடா வெட்டப்பட்டு சாமியாட்டமும் நடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

**சிதம்பரநாடான்**

சிதம்பர நாடான் ஒரு வீரன். பறக்கை வரை உள்ள நாடார் ஊர்களுக்கு இவர்தான் அதிகாரி இவர் பறக்கையில் உள்ள பாப்பாத்தி என்ற பெண்ணை மரணத்தில் இருந்து காப்பாற்றி இருக்கிறார். பின்னர் இரண்டுபேருக்கும் தொடர்பு ஏற்பட்டதாம். இந்த பெண் இவருடன் வாழ இவர் வீட்டிற்க்கே வந்திருக்கிறார். அந்த பிரச்சனையில் பறக்கை பிள்ளைமார் இவரை கொலை செய்தனர். பாப்பாத்தியும் உடனே இறந்து போகிறாள். அவர்களை அந்த ஊர் மக்கள் தெய்வமாக வழிபடுகின்றனர். சிதம்பரநாடான் கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை கொடைவிழா நடைபெறும். சிதம்பர நாடானை சிறுதெய்வமாக வழிபடும் செய்தியை நாவல் குறிப்பிடுகிறது.

**சுடலைமாடான் சாமி**

ஆண் தெய்வங்களில் சுடலைமாடான் சாமி மறுபக்கம் நாவலில் துணைமை தெய்வமாக கருதப்படுகிறது. தமிழகத்தில் தென் மாவட்டங்களில் சுடலைமாடான் வழிபாடு சிறப்பு பெற்று விளங்குகிறது. சுடலை என்பது சுடுகாட்டையும் மாட்டுத்தலையையும் உடையவன் என்றும் பொருள்படும். காவல் தெய்வமாக வழிப்படப்படும் சுடலைமாடான் கோயில்கள் சுடுகாட்டிற்க்கு அருகிலேயே அமைந்திருக்கும். சுடலைமாடான் வழிபாடு இரவில் நிகழ்வதாகவும், ஆடு, சேவல், பன்றி ஆகியவை பலிகொடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. சுடலைமாடன் சிறுதெய்வ வழிபாட்டுத் தெய்வங்களில் ஒன்று. இந்த சாமிக்கு கிடாய் வெட்டி வழிபாடு செய்யப்படும். சுடலை மாடன் சாமியை ஆற்றுங்கால் பகவதியம்மை கோயில் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்ததை மறுபக்கம் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**குலத்தெய்வம்**

குலத்தினை காக்கும் தெய்வமாகவும் மிகவும் வலிமையான தெய்வமாகவும் குலதெய்வம் போற்றப்படுகிறது. குலதெய்வம் தன்னை வழிபடும் குலத்தினை சார்ந்தவர்களை பேணிக்காப்பதாக நம்பப்படுகிறது. சிறுதெய்வ வழிபாட்டில் குலத்தெய்வ வழிபாடும் ஒன்றாக அமைகிறது. குடும்ப தெய்வ வழிபாடுகள் குலதெய்வ வழிபாடுகள், ஊர் தெய்வ வழிபாடுகள் ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

வீட்டில் யாரேனும் துன்புற்றாலும் நோய்வாய்ப்பட்டாலும் குடும்ப தெய்வத்திற்கு பூசை செய்தால் அவை நீங்கும் எனும் நம்பிக்கை காணப்படுகிறது.

**குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்**
**குலத்தெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி**

என்ற வரிகளை குலதெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் கூறுகிறது. தற்காலத்தில் மக்கள் குலத்தெய்வங்களைப் பாதுகாக்கும் பொருட்டு முதன்மைக் கோயிலில் குலதெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபடும் வழக்கமும் காணப்படுகிறது. நீலன் என்ற பெயருடைய குலதெய்வம் மறுபக்கம் நாவலில் கூறப்பட்டுள்ளது.

சுற்று வட்டாரம் எட்டுப்பத்து ஊர்களில் உள்ளவர்களுக்கு குலதெய்வம் நீலன் தான். ஆனால் இந்த ஊரில் நீலனுக்கு கோயில் கிடையாது என்று நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தனக் கருப்பன் குலதெய்வம், கிருஷ்ண அய்யா குடும்பத்தினர் தேவகோட்டை சிங்கமுகக் கருப்பனையும், மறவரும், தலித்தும் கோனாரும் பெரியநாயகி அம்மையும் ராமேஸ்வரத்தின் அய்யர் குடும்பத்தை சார்ந்தவர்கள் ராக்கச்சி அம்மையையும், சொரிமுத்து அய்யன், சட்டிக் கருப்பன், மீமிசல் வீர மாகாளி போன்ற தெய்வங்களை குலத்தெய்வமாக வழிபடுகிறார்கள். இந்த தெய்வங்களுக்கு அசைவம், சாராயம் போன்றப் பொருட்கள் படையல் இடப்படுகின்றன.

**முடிவுரை**

மக்கள் தன் நோய்கள் நீங்குவதற்கும் பாதுகாப்பிற்காவும் தெய்வத்தை வழிபாடு செய்கின்றனர். இங்கு பெருந்தெய்வ வழிபாட்டில் பிள்ளையாரைப் பற்றி கூறப்பட்டுள்ளது. சிறு தெய்வங்களான பெண் தெய்வங்களை தாய் தெய்வமாகவும், திருமணம் ஆகாமல் இறக்கும் பெண்களை கன்னி தெய்வமாக வழிபடுவதையும், ஆண் தெய்வங்களைப் பற்றியும் குலதெய்வத்தைப் பற்றியும் மறுபக்கம் நாவல் வழி கூறப்பட்டுள்ளது.

**துணை நூற்பட்டியல்**

[1] காந்தி.க. *தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002.

[2] சோமலே, *தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்*. நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1975.

[3] பரமசிவானந்தம். அ. மு. *சமுதாயம் பண்பாடும்*, தமிழ்க்கலை பதிப்பகம், சென்னை, 1962.

[4] பரமசிவானந்தம். அ.மு. *தமிழ் நாட்டு விழாக்கள்*, தமிழ்க்கலை பதிப்பகம், சென்னை, 1962.

[5] தவத்திரு குன்றக்குடி அடிகளார். *ஆலயங்கள் சமுதாய மையங்கள்*. கலைவாணி புத்தகாலயம், 1987.

**தகவலாளர்கள்**

க.மாரிமுத்து - அகவை 84, ச.கோவிந்தன் - அகவை 76, மூ. குண்டுமணி (பூசாரி) - அகவை 62, ம. சாந்தகுமார் (சாமியாடி) - அகவை 65.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.